முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1493

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

31.10.2023, செவ்வாய்கிழமை

1. ஆறுமுக அரங்கமகா ஞானியே
அன்னதான அருட்பெரும் தவசியே
மாறுதலை தருவேன் என்று கலியுகத்தில்
மகான் சுப்ரமணியன் என் அவதாரமாக
2. அவதாரமாக தமிழக எல்லையிலே
அற்புதம்பட அவதரித்த அரங்கனே
அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 14 ம் நாள், 31.10.2023, செவ்வாய்கிழமை)
3. வரமென அரங்கன் உன் தர்மம் தான்
வையகத்தை காத்தருளக்கூடும்
அறமாக அரங்கன் உன் சன்மார்க்கம் தான்
அகிலத்தையே மீட்டருளக்கூடும்
4. கூடாத மாச்சர்யங்கள் அத்தனையும்
குவலயத்தை விட்டு அரங்கன் சக்தி பரவப்பரவ
பரவவே அகன்றோடி பெரும்பாதுகாப்பாய்
பாருலகம் அமையக் கூடும்
5. துறவி அரங்கன் தூய தர்ம கொள்கைதான்
அறத்தின் பலத்தை உலகமெல்லாம்
பெருக்கி ஆற்றல் மிக்க
தர்ம லோகத்தை அமைக்கக்கூடும்
6. கூடவே அரங்கன்பால்
பிரணவக் குடிலை நாடி
நாடெங்கும் உள்ள மக்களெல்லாம்
ஞானம் வேண்டி வந்தால்

7. வந்திட ஏக கணப் பொழுதே
எல்லோருக்கும் சமமாக ஞானியர்களாகும் வாய்ப்பும்
மகான் சுப்ரமணியர் யான் வரமாக அருளி
மண்ணுலகில் அற்புதம் நடத்துவேன்

8. நடத்தவே ஆற்றல்மிக்க சபை அரங்கன் சபை
ஞாலமதில் அன்னதனால் உலகோர் அணுகிவந்தால் போதும்
மாற்றம் உலகே கண்டு
மண்ணுலகில் அற்புதம் காணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–